**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No.8287/2014**

Date. 04.11.2025

பெயர்: ஆறுமுகம்

வழக்கு சாட்சி. பு.த.சா.1

**குறுக்கு விசாரணை**

1. CMP. 4007/2015 என்ற மனுவை நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி மனுவை நான் தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி மனுவை நான் தாக்கல் செய்துவிட்டு தற்போது ஞாபகம் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுவை நான் தாக்கல் செய்தேன் என்றும், அதில் ஒன்று மற்றும் இரண்டாம் எதிரிகளைப் பொறுத்து நான் சரியான முகவரியை குறிப்பிடாததால் அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல.

2. ஒன்று மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்படவில்லை என்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். என்ன காரணத்திற்காக ஒன்று மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு அறிவிப்பானது சார்வு செய்யப்படவில்லை என்றால் அறிவிப்பானது சார்வு செய்யப்படாமல் திரும்பி விட்டது தெரியும் ஆனால் எதற்காக என்று தற்போது ஞாபகம் இல்லை. அறிவிப்பு சார்வு செய்யப்படாமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. ஒன்றாவது எதிரியின் மீது பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா –ல் புகார் ஏதும் அளித்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

3. சிற்றுந்துகள் தமிழ்நாட்டில் கடந்த 2000ம் ஆண்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். சிற்றுந்துகள் சங்கத்தின் செயலாளராக சுரேந்திரன் இருந்தார் என்றால் இருந்தார். சுரேந்திரன் இந்த வழக்கின் ஐந்தாம் எதிரியான கோவிந்தசாமி என்பவர் மீது குற்ற எண்.645/2012 என்ற வழக்கில் ஈரோடு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் என்றும், அதில்

சுரேந்திரனுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஐந்தாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

4. நான் அ.தி.மு.க என்ற அரசியல் கட்சியில் உறுப்பினராக உள்ளேனா என்றால் தற்போது இல்லை ஏற்கனவே இருந்தேன். எனக்கு ஈரோடு எல்லீஸ் பேட்டையில் தோட்டம் உள்ளதா என்றால் உள்ளது. மேலும் கே.ஏ.எஸ் என்ற பெயரில் ஈரோட்டில் லாட்ஜ் உள்ளதா என்றால் இருந்தது ஆனால் தற்போது இல்லை. மேற்படி லாட்ஜில் கணேசன் என்பவர் என்னிடம் பணிபுரிந்தாரா என்றால் அதுபோன்று யாரும் இல்லை.

5. ஈரோடு மாவட்டம் காஞ்சிகோயில் காவல் நிலையத்தில் குற்ற எண். 99/2003 என்ற வழக்கின் சம்பவமானது மேற்படி எல்லீஸ் பேட்டையில் உள்ள ஆறுமுகம் தோட்டத்தில் நடைபெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

6. மேற்படி எனது தோட்டத்தில் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டதா என்றால் தயாரிக்கப்பட்டது. மேற்படி குற்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் மேற்படி என்னுடைய தோட்டத்திற்கு வந்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி குற்ற வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(1ம் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.11.04 17:06:45 -0800

Judicial Magistrate No.III,

Erode.